1974 மார்ச் 28]

நடுவட்டத்தில் டைவர்ஷன் அணைத்திட்டம்

* 662 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுவட்டம், டைவர்ஷன் அணைக்கட்டின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இத்திட்டத்தை நிறைவேற்ற சுமார் ரூ. 220 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தும்மக்குண்டு ஊராட்சியில் மின் சக்தி வழங்கல்

* 663 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு ஊராட்சி மன்றத்தை சேர்ந்த கர்டானா எஸ்டேட்டுக்கு 1971-ம் வருடம் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும், இன்னமும் லைட்டு போடாமல் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கர்டானா எஸ்டேட்டு ஒரு தனிப்பட்டவரின் பட்டா நிலத்தில் இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு மாற்றிக் கொடுத்தால் மின் விசை கொடுக்கப்படும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, அந்த ஊராட்சி மன்றமே தீர்மானம் நிறைவேற்றி, அங்குள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று 71-ம் ஆண்டே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் மின் இணைப்புச் செய்துதரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த இடம் ஒரு தனிப்பட்டவருக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு எழுதிக்கொடுத்தால் மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.